**In the Court of Judicial Magistrate No.I, Kovilpatti.**

DEPOSITION OF WITNESS

(Chapter XXIII, CrPC)

| | | |
|---|---|---|
| Case No. | : | STC No.98/2026 |
| Deposition of witness for Prosecution | : | P.W– 1 |
| Name | : | ரமணன், 51 |
| Father Name/Husband Name | : | பிச்சாண்டி |
| Village | : | கோவில்பட்டி |
| Taluk | : | கோவில்பட்டி |
| Calling | : | professor |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 10th day of June 2026.

**(Accused absent. 355 BNSS petition filed and allowed).**

<u>**முதல் விசாரணை**</u>

1 நான் தற்போது கோவில்பட்டியில் வசித்து National engineering college ல் professor ஆக வேலை செய்து வருகிறேன். ஆஜர் இல்லாத எதிரியை தெரியும். எங்கள் கல்லூரியில் M.E. படித்துள்ளார். கடந்த 04.03.2024 ஆம் தேதி மதியம் 02.10 மணிக்கு எங்களது கல்லூரியில் உள்ள எனது அறையில் மூன்று மாணவர்களை Project review சம்பந்தமாக வர சொல்லியிருந்தேன். அப்போது Project சம்பந்தமாக கேட்டு கொண்டிருந்தபோது எதிரி கையால் எனது தலையில், முகத்தில், முதுகில் அடித்தார். நான் என்ன, ஏது என்று கேட்பதற்குள்ளே எனக்கு 4,5 அடிகள் விழுந்தது. அப்போது சத்தம் கேட்டு அருகிலிருந்து வந்த எனது சக பேராசிரியர்களான சுடலையாண்டி, ஜெயவெங்கடேஷ் வந்த எதிரியை தடுத்து ஏன் அடிக்கிறாய் என்ன பிரச்சனை என்று கேட்டபோது போன project ல் நிறைய சரி செய்து report சமர்பிக்க நான் சொன்னதால் எதிரிக்கு கோபமாக இருந்ததால் என்னை அடித்ததாக அவர்களிடம் சொன்னார்.

2 பின்னர் அவரை மேற்படி பேராசிரியர்கள் வெளியே கொண்டு செல்லும்போது இன்னும் ஆத்திரம் அடங்கவில்லை. உன்னை கொல்லாமல் விடமாட்டேன் என்று சொல்லிவிட்டு அழைத்து சென்று விட்டார்கள். பின்பு நான் கல்லூரி முதல்வரிடம் தகவல் சொல்லிவிட்டு நாலாட்டின்புதூர் காவல் நிலையத்தில் புகார் கொடுத்தேன். என்னிடம் காட்டப்படும்

புகார்மனுவில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான். அந்த புகார்மனுவை நான்தான் கொடுத்தேன். **(அந்த புகார்மனு அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது).** போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

3 சம்பவத்தின் போது கல்லூரியின் Correspondent யார் என்றால் திரு. கே. ஆர். அருணாசலம் ஆகும். சம்பவம் குறித்து Correspondent விடம் தகவல் சொன்னீர்களா என்றால் நான் முதல்வரிடம் தகவல் சொல்லி அவர் Correspondent விடம் தகவல் சொன்னார். அந்த விவரம் எனது புகார்மனுவில் துலங்குமா என்றால் துலங்காது. இந்த வழக்கு சம்பந்தமாக 04.03.2024 ஆம் தேதி இரவு 07.30 மணிக்கு நாலாட்டின்புதூர் காவல் நிலையத்தில் புகார் கொடுத்தீர்களா என்றால் புகார் கொடுத்துள்ளேன். அந்த புகார்மனுக்கு மனு ரசீது வழங்கபட்டதா என்றால் வழங்கபட்டது. அதன் பிறகு 05.03.2024 ஆம் தேதி மாலை 05.30 மணிக்கு முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டது என்றால் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டது நான் 05.03.2024 அன்று காலை மருத்துவ சிகிச்சைக்கு மருத்துவமனைக்கு சென்றேன்.

4 நான் மருத்துவமனையில் சிகிச்சைக்கு சேர்ந்து போலீசார் கொடுத்த அழுத்தத்தால் இவ்வழக்கு பதிவு செய்யப்பட்டது என்றால் சரியல்ல. எனக்கு உண்மையில் காயம் ஏற்பட்டிருந்தால் நான் சம்பவம் நடந்த அன்றே மருத்துவமனைக்கு சென்றிருப்பேன் என்றால் சரியல்ல, மறுநாள் எனக்கு வலி ஏற்பட்டதால் நான் உடனடியாக சிகிச்சைக்கு செல்லவில்லை, கன்னுக்கு தெரிந்த காயம் எனது முகத்தில் இருந்ததது, மற்ற காயங்கள் அனைத்தும் எனக்கு ஊமை காயங்கள் ஆகும். நான் அவ்வாறு சொல்வது பொய் என்றால் சரியல்ல. எனக்கு ஏற்பட்ட காயம் நான் நிலைதடுமாறி கீழே விழுந்ததால் ஏற்பட்டது என்றால் சரியல்ல.

5 சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் இடத்தில் சிசிடிவி காமராக்கள் உள்ளதா என்றால் இல்லை. காவல் நிலையத்தில் நான் கொடுத்த புகார்மனு கல்லூரி நிர்வாகம் மூலமாக காவல் நிலையத்திற்கு அனுப்படவில்லை என்றால் சரிதான், நானே நேரடியாக கொடுத்தேன். நான் சொல்வது போல் உண்மையில் சம்பவம் நடைபெற்றிருந்தால் கல்லூரி நிர்வாகம் மூலம் புகார் கொடுக்கப்பட்டிருக்கும் என்றால் சரியல்ல. நான் ME project சம்பந்தமாக அழுத்தம் கொடுத்ததால் எதிரியின் பெற்றோர் கல்லூரி நிர்வாகத்திடம் உங்கள் மீது வாய்மொழியாக புகார் தெரிவித்ததால் அதை விரோதமாக வைத்து கொண்டு எதிரி பொய் புகார் கொடுத்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் சொன்னது போல்

சொன்ன நேரத்தில் எதிரி என்னை தாக்கி கொலைமிரட்டல் விடுக்கவில்லை என்றால் சரியல்ல.

**மறு விசாரணை இல்லை.**

Taken before me in open court in the presence of accused and read over to the witness and acknowledged by him/her to be Correct.

Sd/ Tr. K. Anand, B.A, M.L.,
Judicial Magistrate No.1,
Kovilpatti.